நீதித்துறை நடுவர் எண். 1 நீதிமன்றம்,
திண்டுக்கல்.
முன்னிலை: திரு. எஸ். பாக்கியராஜ், B.Sc., B.L.,
நீதித்துறை நடுவர் எண். 1
2026 ம் ஆண்டு ஏப்ரல் 17–ம் நாள் வெள்ளிக்கிழமை

**M.P.No.8/2026**
**in**
**STC.No.2694/2025**

G. பாலன், (56/2026),
த/பெ. லேட். கணேசன் ... மனுதாரர்/2 ம் எதிரி

//எதிராக //

திரு. குமார், (24/2026),
த/பெ. லேட். பெருமாள் ... எதிர்மனுதாரர்/புகார்தாரர்

மனுதாரர்/எதிரி சார்பாக வழக்குரைஞர் திரு.A. தேவராஜீ அவர்கள் முன்னிலையாகியும் எதிர்மனுதாரர்/புகார்தாரர் சார்பாக வழக்குரைஞர் திரு.V. மனோஜ் அவர்கள் முன்னிலையாகியும் இரு தரப்பு வாதமும் கேட்டும் ஆவணங்களை பரிசீலணை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

## உத்தரவு

மனுதாரர்/ எதிரி தரப்பில் எதிரி பாலன் மற்றும் சீனிவாசபாபு ஆகியோர்களை எதிரி தரப்பு சாட்சிகளாக விசாரணை செய்ய அனுமதி வேண்டி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

### 1) மனுதாரர் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சுருக்கம்

மனுதாரர்/ எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவில், தனக்கு புகார்தாரரை யார் என்றே தெரியாது என்றும், புகார்தாரரிடம் தான் கடனாக எந்த பணமும் வாங்கவில்லை என்றும், புகார்தாரர் உண்மைக்கு புறம்பாக பொய்யாக தனிப்பிராதை தாக்கல் செய்துள்ளதாகவும், தனது தரப்பில் எதிர்வாதம் மற்றும் தனது சாட்சியத்தின் மூலமும் இதர சாட்சியங்கள் மூலமும் ஆவணங்களுடன் நிரூபிக்க தயாராக இருப்பதாகவும், எனவே தனது தரப்பு சாட்சிகளை சாட்சியாக விசாரிக்க அனுமதி வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

### 2) எதிர்மனுதாரர்/புகார்தாரர் தரப்பு எதிர் வாதம்

எதிர்மனுதாரர்/புகார்தாரர் தரப்பில், இம்மனுவானது இந்த வழக்கை காலதாமதப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது எனவும்,

மனுதாரர் / 2ம் எதிரி தன்னை என்ன காரணங்களுக்காக எந்த முகாந்திரத்தின் அடிப்படையில் சாட்சியாக விசாரிக்க வேண்டுமென்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றும், மேலும் 2வது சாட்சியாக சீனிவாச பாபு என்பவரை சாட்சியாக விசாரிக்க வேண்டுமென்று கூறியுள்ளார். மேற்படி சாட்சியை பற்றி மனுதாரர் / 2ம் எதிரி தனது வழக்கறிஞர் பதில் அறிவிப்பில் எந்த சங்கதிகளும் கூறவில்லை. 2வது சாட்சியை எந்த காரணத்திற்காக எதனடிப்படையில் விசாரணை செய்யப்படவேண்டும் என்று குறிப்பிட்டு எந்த காரணமும் சொல்லப்படவில்லை. எனவே இம்மனு தள்ளுப்படி செய்யப்பட வேண்டும் என்று எதிர்மனுதாரர்/புகார்தாரர் தரப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**3) தீர்மானிக்கப்படவேண்டியவை**

**மனுதாரர்கள் கோரியவாறு இம்மனு அனுமதிக்கத்தக்கதா ? இல்லையா ? என்பதுவே ஆகும்.**

மனுதாரர்/ எதிரி தரப்பில் எதிரி பாலன் மற்றும் சீனிவாச பாபு ஆகியோர்களை எதிரி தரப்பு சாட்சிகளாக விசாரணை செய்ய வேண்டுமென கோரப்பட்டுள்ளது. மனுவில் கண்ட 2ம் சாட்சியை விசாரணை செய்ய காரணங்கள் எதும் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை. எதிர்மனுதாரர் தரப்பில் சொல்லப்பட்டுள்ள வாதம் ஏற்றுக்கொள்ளத்தக்கதாகவே உள்ளது. எனவே, மனுவில் கண்ட 1 வது சாட்சியான எதிரி பாலன் அவர்களை எதிரி தரப்பு சாட்சியாக விசாரணை செய்து கொள்ள அனுமதிக்கப்படுகிறது. 2ம் சாட்சியை பொறுத்து இம்மனுவானது தள்ளுபடி செய்யப்படுகிறது.

**இறுதியாக இம்மனுவானது பகுதியாக அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.**

என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு என்னால் இன்று **17.04.2026** அவை அறிய பகரப்பட்ட உத்தரவு.

PACKIARAJ Digitally signed by PACKIARAJ Date: 2026.04.17 16:28:24 +0530

நீதித்துறை நடுவர் எண்.1
திண்டுக்கல்.